

# கற்பகமூர்த்தி

குடவறைக் கோயிலில் அமர்ந்து
குறைகளைக் களையும் விதத்தில்
இடர்களின் எமனாய் இருப்பவனே!
நிறைவாய் அள்ளித் தருபவனே!
உள்ளிருக்கும் கவலைகள் ஒழிந்திடவும்,
விரைவாய் உயர்வு பெற்றிடவும்,
பிள்ளையார் பட்டிப் பெருமானே!
பெரிதாய்க் காக்கவேண்டுமுன் அருளாலே!

– சித. அருணாசலம் (Y0029)

# பொருளடக்கம்


1 தலைவர் உரை
2 ஆசிரியர் உரை
3 நிறைவேறிய நிகழ்ச்சிகள்
- ❖ தொண்டர்குழு உபயம்
- ❖ வருடாந்திரப் பொதுக் கூட்டம்
- ❖ தைப்பொங்கல்
- ❖ புனர்பூசம் / தைப்பூசம் / மகமைக் கூட்டம்
- ❖ மண்டலாபிசேக பூர்த்தி

4 நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகள்
- ❖ ஒரு நாள் உல்லாச சுற்றுலா

5 கோவில் செய்தி
- ❖ செட்டியார் கோயில் குழுமத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள்.
- ❖ உபரிக் கார்த்திகை
- ❖ தைப்பூச விருந்து

6 நகரத்தார் பக்கம்
- ❖ சிந்தனைத் துளிகள்
- ❖ அறிவோமா ஆன்மீகம்
- ❖ ஆரோக்கய பகுதி
- ❖ பர்மா பயணம்
- ❖ கவிதை

7 மகளிர் பக்கம்
- ❖ வீட்டுக் குறிப்புகள்
- ❖ சமையல் பகுதி
- ❖ சமையல் டிப்ஸ்
- ❖ சமையல் குறிப்பு
- ❖ கோலம்

8 சிறுவர்கள் பகுதி
- ❖ புதிர் பகுதி

9 இதர செய்திகள்



**15A,தேங்க் ரோடு**
**சிங்கப்பூர் 238065**
**தொலைபேசி எண்:6737 9393**
http://www.sttemple.com
http://www.singainagarathar.com

# தலைவர் உரை



*அன்பிற் சிறந்த, பண்பில் உயர்ந்த மதிப்பு மிகு சிங்கை நகரத்தார் பெருமக்கள் அனைவருக்கும் எனது, எங்கள் செயற்குழுவினரின் பணிவான வணக்கம்.*

*எங்களின் இதயங்கனிந்த புத்தாண்டு, மற்றும் பொங்கல் நல்வாழ்த்துக்கள். நம் எல்லோருக்கும் 2008 ஆண்டு மிகச்சிறப்பான ஆண்டாக அமைய வேண்டும் என இறைவனை வேண்டி எங்கள் பணியைத் தொடங்குகின்றோம்.*

*2008 பொதுக்குழு கூட்டத்திற்கு இதுவரை கண்டிராத அளவிற்கு திரளாக வந்து ஒரு மனதாக மகிழ்ச்சி ஆராவாரத்துடன் எங்களைத் தேர்ந்தெடுத்தமைக்கு எங்களது நன்றியை பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கின்றோம். புதிய இளைஞர்களைக் கொண்ட எங்கள் செயற்குழு நீங்கள் நினைத்த வண்ணம் செயல்படும் என உறுதி கூறி எங்கள் பணியைத் தொடங்குகின்றோம்.*

*தை பிறந்தால் வழி பிறக்கும் என்பதற்கு ஏற்க நாங்கள் மங்களகரமாக மஞ்சளைக் கையில் எடுத்துக் கிடைத்த பொங்கல் காய்கறிகளைச் சீரிய வகையில் பெருக்கி நம் உறுப்பினர்கள் பலருக்கும் கிடைக்க, முதற்பணி தொடர்ந்தது. நாம் எல்லோரும் உற்சாகமாக, மகிழ்ச்சி பொங்க புதுப் பொங்கலிட்டு உண்டு மகிழ்ந்தோம்.*

**"புதுப் பொங்கலுக்கு பழைய உப்பு"**

*பொங்கலுக்கு உப்பா என சிறிது எண்ணுவீர்கள். பொங்கலிட எல்லாமே புதிது, பொங்கல் இட்ட பாணை புதிது, புதுக்கதிர் அருத்து வந்த அரிசி புதிது, புதிய கரும்பிலிருந்து வந்த வெல்லமும் புதிது, காய்கறிகள் புதிது, ஆனால் உப்பு மட்டும் தான் பழையது. எத்தனை தான் புதிது என்றாலும் பழைமை இணைகின்ற பொழுது அதன் மதிப்பும், தரமும் உயரும்.*

*பேராற்றல் மிக்க துடிப்பான இளையோர்களே, நீங்கள் கல்வியிலும், ஆற்றலிலும் சிறந்து விளங்குகின்றீர்கள். அனுபவமிக்க பழைய, பெரியவர்கள் சொல்லுக்கு செவிசாய்த்து செயல்பட்டால், உங்கள் வாழ்வு மேலும் சிறப்படையும்.*

*நாம் விரும்பி, ஆவலோடு எதிர் பார்த்திருந்த தைப்பூச திருநாளும் வந்து சென்றது. இந்த ஆண்டும் தைப்பூசத்தைச் சிறப்பாக கொண்டாடினோம்.*

*நம் கோவிலில் புதிய அறங்காவலராக, திரு வெங்கடாசலம் செட்டியார் பொறுப்பேற்றிருக்கின்றார்கள். அவர்களுக்கும், புதிய அறங்காவலரின் குழுவினற்கும் நாம் எல்லோரும் வாழ்த்துக்களைத் தெரிவித்து, மற்ற சிங்கப்பூரர்கள் வியக்கும் வண்ணம், பேராதரவும், ஒத்துழைப்பும் கொடுத்து கோவில் நிர்வாகம் சிறப்பாக செயல்பட உதவ வேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன்.*

*அடுத்து உங்களை மகிழ்விக்க பள்ளி விடுமுறையில் மார்ச்சு திங்கள் 9ம் தேதி (09-03-2008) ஞாயிற்றுக்கிழமை உல்லாசப் பயணத்திற்காக புதிய, எல்லா வசதிகளும் நிறைந்த இடத்திற்கு அழைத்துச் செல்லத் திட்டமிட்டிருக்கின்றோம். இது பற்றிய விரிவான செய்தியை மலரில் தெரிவித்திருக்கின்றோம். நீங்கள் எல்லோரும் உல்லாசப் பயணத்திற்கு பேராதரவு தந்து, கலந்து கொண்டு சிறப்பாக்க கேட்டுக்கொள்கின்றேன்.*

*நகரத்தார் மலர் ஆசிரியர் பொறுப்பை நமது சங்க மூத்த உறுப்பினர் திரு சுப. அருணாசலம் ஏற்றுக் கொண்டிருக்கின்றார். அவர்கள் மலரை இரண்டு திங்களுக்கு ஒரு முறை வெளியிட்டு, உங்கள் இல்லம் வந்தடைய, நீங்கள் எல்லோரும் உறுதுணையாக இருந்து, உதவ முன் வரவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.*

*கற்பக விநாயகரின் பாதம் பணிந்து சிங்கை சிங்காரன் அருளால் நாம் அனைவரும் நல்ல உடல் நலமுடன், எல்லா வளமும் பெற்று மகிழ்ச்சி பொங்க வாழ வேண்டிக் கொள்கின்றேன்.*

*மீண்டும் நாம் இரண்டாவது மலர்க் கொத்தில் சந்திப்போம்.*

***நன்றி***

***அரு.அருணாசலம், தலைவர்***

# ஆசிரியர் உரை

***வணக்கம்!***



உங்கள் அனைவரையும் நகரத்தார் மலர் வாயிலாகச் சந்திக்கும் வாய்ப்பினால் பெருமை கொள்வதுடன் அதற்கு நன்றியும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உழவாரப் பணியை உளமார மேற்கொண்ட தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களின் வழியிலே, ஆலயத் தொண்டாற்றுவதும், ஆலய வளாகத்தைச் சுத்தம் செய்வதுமான திருப்பணிகளைச் செய்வதிலே நமது நகரத்தார்கள் சிறந்து விளங்குவது நாம் அனைவரும் அறிந்ததே. சமீபத்தில் முடிந்த லயன் சித்தி விநாயகர் கோயில் கும்பாபிஷேகமும், தைப்பூச விழாவும் அதற்குச் சிறந்த உதாரணங்கள்.

பெரிய அளவிலே நடைபெறுகின்ற இதுபோன்ற விழாக்களிலே, நாம் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ளும் வாய்ப்பும், தொடர்புகளின் உறுதியும் அதிகமாகிறது. நகரத்தார்களின் பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் நமது குழந்தைகள் தெரிந்து கொள்வதற்கான சந்தர்ப்பங்களும் பெருகுகின்றன. சிங்கப்பூரிலே நமக்குக் கிடைத்த மிகப்பெரிய பேறாக இதைக் கருதலாம்.

இத்தகைய விழாக்களிலே, பங்கு பெறுபவர்களின் எண்ணிக்கையின் காரணமாகவும், பெரிய அளவிலே செய்யப்படுகின்ற ஏற்பாடுகளின் காரணமாகவும் சிறு சிறு சச்சரவுகள், உரசல்கள் வருவது வாடிக்கை தான். அதைக் பொருட்படுத்தாமல் பணியாற்றுகின்ற நமது பாங்கு போற்றத்தக்கதே. இந்தப் பெருந்தன்மையை நாம் மேன்மேலும் வளர்த்துக் கொள்வதோடு, நமது வாரிசுகளின் மனங்களிலே அதை விதைக்க வேண்டும் என்பதிலே முக்கியக் கவனம் செலுத்த வேண்டும். மேலும் இது போன்ற விழாக்களிலே சந்திக்கின்ற இடையூறுகளை முறைப்படி, யாரையும் புண்படுத்தாதவாறு தெரியப்படுத்தினால் அதைத் திருத்தி, அதற்கான மாற்று ஏற்பாடுகளைச் செய்து செயல்களிலே சிறக்கலாம். மாற்றம் என்பது தான் எப்பொழுதுமே மாறாத ஒன்று. அப்படிப்பட்ட மாற்றங்களால் தான் மறுசீரமைப்பை நிர்மானிக்க முடியும். அதற்கு அனைவரது புரிந்துணர்வும், பூரண ஒத்துழைப்பும் கண்டிப்பாக வேண்டும்.

நமக்குள்ளே வேறுபாடுகளே இல்லை என்று சொல்கிறார்போல, இன்று போலவே என்றும் உங்களது ஆதரவும், ஒத்துழைப்பும் தொடர்ந்திட வேண்டும். நமது சங்கத்தின் செயல்பாடுகள் சிறந்திட வேண்டும்.

***நன்றி!.***

***சுப. அருணாசலம், ஆசிரியர்.***

# நிறைவேறிய நிகழ்ச்சிகள்

## *(அ) தொண்டர்குழு உபயம்: (01.01.2008)*

*வழக்கம்போல் 01.01.2008 அன்று தொண்டர்குழு உபயம் சிறப்பாக நடைபெற்றது. மாலை 7 மணி அளவில் தீப ஆராதனையைத் தொடர்ந்து அருட்கடவுள் அருள்மிகு தெண்டாயுதபாணி, வெள்ளி இரதத்தில் கோயிலை வலம் வந்து பக்தர்கள் அருள் பெற்றனர். தொடர்ந்து தொண்டர்குழு உபய விருந்து மிகச்சிறப்பாக நடைபெற்றது. தொண்டர்குழுவின், தன்னலம் கருதாத சேவை, தொடர்ந்து நடைபெற இறைவன் அருள் புரிய வேண்டி அவர்களை மனதார வாழ்த்தி பாராட்டுகிறோம்.*

## *(ஆ) தைப்பொங்கல் (15.01.2008)*

*தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் சர்வஜித் ஆண்டு தைத் திங்கள் முதல் தேதி (15.01.2008) அன்று கொண்டாடப்பட்டது. இந்த ஆண்டும் அருள்மிகு தெண்டாயுதபாணி திருக்கோயில் நிர்வாகக் குழுவின் ஏற்பாட்டில் பொங்கல் காய்கறிகள் வரவழைக்கப்பட்டன. பொங்கலுக்கு முதல் நாள் (14.01.2008) திங்கட்கிழமை மாலை 6.00 மணி அளவில் மன்ற நிர்வாகக் குழுவின் உதவியுடன் நமது நகரத்தார்களுக்கு பொங்கல் காய்கறிகள் வழங்கப்பட்டது. மறுநாள் (15.01.2008) செவ்வாய்க்கிழமை காலை 6.15 மணி அளவில் லயன் சித்தி விநாயகர் கோயிலில் பொங்கல் வைத்து, காலை 7.45 மணிக்கு தீப ஆராதனை நடைபெற்றது. அதன் பிறகு 7.00 மணி அளவில் அருள்மிகு தெண்டாயுதபாணி திருக்கோயிலில் பொங்கல் வைத்து, காலை 8.30 மணிக்கு தீப ஆராதனை நடைபெற்றது. ஆச்சிமார்களின் கைவண்ணத்தில் உருவான வண்ணக்கோலங்கள் நம் செட்டிநாட்டின் பாரம்பரியத்தினைப் பிரதிபலித்து, திருக்கோயிலின் அழகிற்கு மேலும் மெருகூட்டியது.*

## *(இ) வருடாந்திர பொதுக் கூட்டம்: (06.01.2008)*

*அருள்மிகு தெண்டாயுதபாணி கோயில் செட்டியார் திருமணமண்டபத்தில் (06.01.2008), ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணி அளவில் நம் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் சென்ற ஆண்டுத் தலைவர் திரு.* RM. *முத்தையா அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. தலைமை உரை மற்றும் வருடாந்திர கணக்கு வாசித்தற்குப் பிறகு, திரு* AR. *சுப்பையா அவர்கள் மற்றும் திரு* M. *சாமிநாதன் அவர்கள் தேர்தல் அதிகாரிகளாகப் பணியாற்றி இந்த ஆண்டிற்கான நிர்வாகக் குழுவைத் தேர்ந்தெடுத்தார்கள். பொதுக்கூட்டத்தில் ஏக மனதாக தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த ஆண்டின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பின் வருமாறு:*

| | |
|---|---|
| **தலைவர்** | திரு. AR. அருணாசலம் |
| **உபதலைவர்** | திரு. CY. ரவி |
| **செயலாளர்** | திரு. RM. லெட்சுமணன் |
| **உதவிச் செயலாளர்** | திரு. M. தேனப்பன் |
| **பொருளாளர்** | திரு. KN. முத்துக்கணபதி |
| **உதவிப் பொருளாளர்** | திரு. RM. நாராயணன் |

**செயற்குழு உறுப்பினர்கள்**

திரு. CH. வீரப்பன்,
திரு. M. அய்யப்பன்
திரு. V. ராமனாதன்,
திரு. KM. சோலையப்பன்
திரு. T. சுப்பிரமணியன்,
திரு. KE. ராமனாதன்
திரு. KM. ராமனாதன்,
திரு. N. ராமனாதன்
திரு. S. அருணாசலம்,
திரு. S. அய்யப்பன்
திரு. C. சுப்பு,
திரு. C. செந்தில்னாதன்
திரு. SM. ரெங்கநாதன்,
திரு. VE. சுப்பிரமணியன்
திரு. PL. வள்ளியப்பன்.

**ஒத்துழைப்பு உறுப்பினர்கள்:**

திரு. RM.முத்தையா
திரு. C. கண்ணன்

**உட்-தணிக்கையாளர்கள்**

திரு. S. சாமிநாதன்
திரு. K. செல்வம்

***(ஈ) புனர்பூசம், தைப்பூசம்: (21.01.2008, 22.01.2008)***



*ஆண்டுதோறும் நடைபெறும் அருள்மிகு தெண்டாயுதபாணி திருக்கோயிலின் முக்கிய நிகழ்ச்சியான தைப்பூசம், இந்த ஆண்டு 21.01.2008 அதிகாலை 4.00 மணிக்கு புனர்பூச வைபவத்துடன் சிறப்பாகத் தொடங்கியது. அதிகாலை 5.30 மணிக்கு ஸ்ரீ தெண்டாயுதபாணி வெள்ளிரதத்தில் தேங்க் ரோட்டிலிருந்து லயன் சித்தி விநாயகர் கோயில் வரை நகர்வலம் வந்தார். பிறகு மாலை 6.00 மணிக்கு 108 செட்டிக்காவடிகள், ஸ்ரீ தெண்டாயுதபாணி, வெள்ளிரதத்தில் பின்தொடர்ப் பாட்டு கோஷங்களுடன் சிங்கையின் முக்கிய வீதிகளில் வலம் வந்து இரவு 8.30 மணியளவில் தேங்க் ரோடு வந்து சேர்ந்தன, காவடிப்பிள்ளைகள் காவடி ஆட்டங்கள் ஆடிய பிறகு, இரவு முருகப்பெருமான் ஊஞ்சலில் காட்சி தந்து அர்த்தஜாம பூஜையுடன் புனர்பூசம் முடிய, அதிகாலை 12.00 மணிக்கு பால் அபிஷேகத்துடன் தைப்பூசம் தொடங்கியது. காலை 7.00 மணிக்கு நகரத்தார் காவடிகள் செலுத்தப்பட்டது. தைப்பூசத்தன்று*

*அன்னதானம் நண்பகல் 12.00 மணிக்கு தொடங்கி மாலை 6.30 மணி வரை தொடர்ந்து நடைபெற்றது. நம் சங்க உறுப்பினர்கள் பல்வேறு வழிகளில் தொண்டாற்றி தைப்பூச நிகழ்ச்சிகள் சிறக்க பெரிதும் உதவினார்கள். இவ்வருட தைப்பூசத்திற்கு தொப்பி மற்றும் துண்டு, பால் விற்கவும், மகமை, கோயில் மற்றும் சங்க சந்தா வசூல் செய்வதற்கு உதவிய அன்பர்களுக்கு நமது சங்கம் பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்து கொள்கிறது.*

## *(ஈ) மகமைக் கூட்டம்: (23.01.2008)*

*தைப்பூசத்திற்கு அடுத்த நாள் 23.01.2008 வெள்ளிக்கிழமை இரவு மகமைக் கூட்டம் நடைபெற்றது. சென்ற ஆண்டு செட்டியார் குழுமத்தின் தலைவராக (கார்பார்) இருந்து சிறப்பாக பணியாற்றிய கல்லல் டாக்டர் திரு. கரு.வெள்ளையப்பன் செட்டியார் அவர்களுக்கு நம் சங்கத்தின் மனமார்ந்த பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த ஆண்டு செட்டியார் குழுமத்தின் தலைவராக (கார்பார்) ஷண்முகனாதபுரம்* **V. வெங்கடாசலம் செட்டியார்** *அவர்கள் ஏக மனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். திருக்கோயில்கள் சிறப்படைய பல்வேறு நலப்பணிகள் ஆற்றவும், ஆண்டு நிகழ்ச்சிகள் அனைத்தும் வெற்றி பெறவும் அவர்களுக்கு நம் சங்கத்தின் சார்பாக வாழ்த்துக்களையும் ஆதரவையும் தெரிவித்துக் கொள்கிறோம்.*

## *(உ) மண்டலாபிசேக பூர்த்தி விழா (01.02.2008 - 02.02.2008)*

*ஸ்ரீ லயன் சித்தி விநாயகர் கோயில் கும்பாபிசேகத்தைத் தொடர்ந்து மாண்டலாபிசேகப் பூர்த்தி யாகம் சிறப்பாக நடைப்பெற்றது. 01.02.2008 வெள்ளிக்கிழமையன்று விநாயக பெருமானுக்கு 108 கலசாபிசேகம், 108 சங்காபிசேகம், நமது கார்பார் திரு.* R. *வெங்கடாசலம் அவர்கள் முன்னிலையில் தொடங்கப் பெற்று பல்வேறு பூஜைகள், பூரணாகுதி தீபாராதனைக்குப்பின் இரவு சிற்றுண்டி 8.00 மணிக்கு வழங்கப்பட்டது.*

*02.02.2008 சனிக்கிழமையன்று காலை 8.00 மணிக்கு இராண்டாம் கால பூஜை ஆரம்பிக்கப்பட்டு காலை 10.45 மணிக்கு பூராணாகுதிப்பின் 108 கலசாபிசேகம், 108 சங்காபிசேகம் நடைப்பெற்று, விநாயகருக்கு சொர்ண அங்கி அணிவித்து நண்பகல் 12.00 மணிக்கு தீபாராதனை நடைப்பெற்றது. மதிய உணவும் வழங்கப்பட்டது. மாலை விநாயகருக்கு சந்தனக்காப்பு அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு சகஸ்ரநாம அர்ச்சனை நடைப்பெற்றது. தீபாராதனைக்குப்பின் இரவு சிற்றுண்டி வழங்கப்பட்டு மண்டலாபிசேக பூர்த்தி விழா இனிதே நிறைவு பெற்றது.*

# நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகள்

## (அ) உள்ளூர் உல்லாசப் பயணம்



இனியதொரு உல்லாசப் பயணம் எதிர் வரும் மார்ச் 9ம் தேதியன்று Labrador Parkல் நடைபெற உள்ளது. இங்கு சென்று வர அருள்மிகு தெண்டாயுதபாணி கோவிலில் இருந்து வாகன வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சி பற்றிய விபரங்கள் பின் வருமாறு.

**கட்டண விவரம்**

| சங்க வாகனத்தில் வரும் | சொந்த வாகனத்தில் வரும் |
|---|---|
| பெரியவர்க்கு $ 12.00 | பெரியவர்க்கு $ 10.00 |
| சிறியவர்க்கு $ 10.00 | சிறியவர்க்கு $ 8.00 |

சிறப்பு அம்சங்கள், சுவையான நிகழ்ச்சிகள். அனைத்து வயதினருக்கும் விளையாட்டுக்கள்.

அதிர்ஷ்டக் குலுக்கல் , தம்போலா, ஏராளமான பரிசுகள்

**குறிப்பு :** நிகழ்ச்சிகள் மாற்றத்திற்கு உட்பட்டவை.

கீழ்கண்ட சங்க உறுப்பினர்களிடம் தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம். மார்ச் 3ம் தேதிக்குள் முன் பதிவு செய்வோர்க்கு அன்பளிப்பு பை அளிக்கப்படும்.

பிரியா ரவி - 68581487
உமா லெட்சுமணன் - 64250143
மீனாள் சுப்பு - 64746466
மாணிக்கவள்ளி தேனப்பன் - 66650063

**பதிவு செய்யக் கடைசி நாள் : 3 மார்ச் 2008**

# கோவில் செய்தி

*2008-2009 செட்டியார் கோயில் குழுமத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள்.*

### *1A கிட்டங்கி*

*திரு. வெங்கடாசலம் செட்டியார் V. - கார்பார்*
*திரு. சேக்கப்ப செட்டியார் AN. - உதவிக் கார்பார்*
*திரு.கண்ணப்பன் K. - நிர்வாகக் குழு உறுப்பினர்*
*திரு.முத்துக்கணபதி KN. - நிர்வாகக் குழு உறுப்பினர்*

### *1B கிட்டங்கி*

*டாக்டர்.வெள்ளையப்பன் K. - நிர்வாகக் குழு உறுப்பினர்*
*திரு.கருப்பையா @ மணி .KR - பொருளாளர்*
*திரு.செல்வ நாச்சியப்பன் M. - நிர்வாகக் குழு உறுப்பினர்*
*திரு.அருணாசலம் S. - உதவிக் காரியதரிசி*

### *1B கிட்டங்கி*

*திரு.முத்தையா மு.மு. - நிர்வாகக் குழு உறுப்பினர்*
*திரு.ராஜேந்திரன் P.S.N. - நிர்வாகக் குழு உறுப்பினர்*
*திரு.லெட்சுமணன் R. - நிர்வாகக் குழு உறுப்பினர்*

### *9 கிட்டங்கி*

*திரு.ராமனாதன் RM. - காரியதரிசி*
*திரு.பெரியகருப்பன் VR. - நிர்வாகக் குழு உறுப்பினர்*
*திரு.அருணாசலம் AR. - நிர்வாகக் குழு உறுப்பினர்*

### *15 கிட்டங்கி*

*டாக்டர்.வயிரவன் S. - நிர்வாகக் குழு உறுப்பினர்*
*திரு. சாத்தப்பன் S. - நிர்வாகக் குழு உறுப்பினர்*
*திரு.ரவி C.Y. - உதவிப் பொருளாளர்*

*இந்த ஆண்டு புதுமையாக, அனைவரும் ஆர்வத்துடன் கலந்து கொள்ளும் வகையில் அனைத்து நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கும் கோவில் சம்மந்தப்பட்ட பொறுப்புகள் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. 2008-2009 செட்டியார் கோயில் குழுமத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள பொறுப்புகள் பின்வருமாறு:*

### *மாத நிகழ்ச்சிகள் (கார்த்திகை,பிரதோஷம், குருபூஜை)*

*திரு.முத்தையா செட்டியார் மு.மு.*
*திரு.ராஜேந்திரன்*

***சிறப்பு நிகழ்ச்சிகள் (ஸ்கந்த ஷஷ்டி, நவராத்திரி, அம்மன் லெட்சார்ச்சனை)***
*திரு. அருண்* S.
*திரு.அருணாசலம் அருணாச்சலம்*
*திரு. ராமசாமி லெட்சுமணன்*

***அன்னதானம்,தினசரி சாப்பாடு***
*திரு.கருப்பையா செட்டியார் @ மணி* .KR
*திரு.செல்வ நாச்சியப்பன்* M.

***கட்டிட கட்டுமானப் பணிகள்***
*திரு.கண்ணப்பன்* K.
*டாக்டர்.வெள்ளையப்பன்* K.

***பராமரிப்புகள்***
*திரு.ரவி* C.Y.
*திரு.முத்துக்கணபதி* KN.

***அசையும் சொத்துக்களும் அதன் மதிப்புகளும்***
*டாக்டர்.வைரவன்* S.
*திரு. சாத்தப்பன்* S.

***லயன் சித்தி விநாயகர் கோயில் மற்றும் தெண்டாயுதபாணி கோயில் சிப்பந்திகள் நலன்***
*திரு. சேக்கப்ப செட்டியார்* AN.

***நிர்வாகப் பொறுப்புகள்***
*திரு.ராமனாதன்* RM.

***வெளிவிவகாரத் தொடர்புகள்,கூட்டங்கள் மற்றும் ரதம் வரும் பாதை தடங்கல் நீக்கல்***

*திரு.பெரியகருப்பன்* VR.
*திரு.ராமனாதன்* RM.
*திரு. அருண்* S.
*திரு.முத்துக்கணபதி* KN.

Neighbourhood Relations ***(அக்கம் பக்க உறவுகள்)***

*டாக்டர்.வெள்ளையப்பன்* K.
*திரு.பெரியகருப்பன்* VR.

***தைப்பூசம்***
*அனைவரும்*

### உபரிக் கார்த்திகை:

*12/03/2008ல் உபரிக் கார்த்திகை வருகிறது. உபயம் செய்ய நினைப்பவர்கள் அருள்மிகு தெண்டாயுதபாணி ஆலய அலுவலத்தில் 29/02/2008 க்குள் எழுதி வைக்கவும். ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் எழுதி வைத்திருந்தால் 02/03/2008ல் சீட்டு குழுக்கிப் போட்டு தேர்வு பெற்றவருக்கு இந்த வருடம் மட்டும் உபயம் அளீக்கப்ப்டும்.*

### தைப்பூச விருந்து

*2008 ஆம் ஆண்டு தைப்பூச விழா சிறப்பாக நடந்தேறியது என்பது அனைவரும் அறிந்ததே. அதனை சிறப்பாக நடத்த உதவிய நம் நகரத்தார் பெருமக்களையும், மற்ற தொண்டூழியர்களையும் கௌரவிக்கும் வகையில் அருள்மிகு தெண்டாயுதபாணி திருக்கோயிலில் 2ம் தேதி மார்ச் 2008 ஞாயிறுக் கிழமை இரவு 7.00 மணி அளவில் விருந்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அனைவரும் குடும்பத்தினருடன் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கோவில் நிர்வாகம் கேட்டுக் கொள்கிறது.*

# நகரத்தார் பக்கம்

## (அ) சிந்தனைத் துளிகள்

### உங்கள் சிந்தனைக்கு

| | |
|---|---|
| மிக மிக நல்ல நாள் | இன்று |
| மிகப் பெரிய வெகுமதி | மன்னிப்பு |
| மிகவும் வேண்டாதது | வெறுப்பு |
| மிகப் பெரிய தேவை | சமயோஜித புத்தி |
| மிகக் கொடிய நோய் | பேராசை |
| மிகவும் சுலபமானது | குற்றங்காணல் |
| கீழ்த்தரமான விக்ஷயம் | பொறாமை |
| நம்பக்க் கூடாதது | வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | அதிகமான பேச்சு |
| செய்யக் கூடாதது | உபதேசம் |
| செய்ய வேண்டியது | உதவி |
| விலக்க வேண்டியது | விவாதம் |
| உயர்வுக்கு வழி | உழைப்பு |
| நழுவ விடக்கூடாதது | வாய்ப்பு |

### இரண்டு....

| | |
|---|---|
| வருவதும் போவதும் இரண்டு | இன்பம், துன்பம் |
| வந்தால் போகாதது இரண்டு | புகழ், பழி |
| போனால் வராதது இரண்டு | மானம், உயிர் |

| | |
|---|---|
| தானாக வருவது இரண்டு | இளமை, முதுமை |
| நம்முடன் வருவது இரண்டு | பாவம், புண்ணியம் |
| அடக்க முடியாதது இரண்டு | ஆசை, துக்கம் |
| தவிர்க்க முடியாதது இரண்டு | பசி, தாகம் |
| பிரிக்க முடியாதது இரண்டு | பந்தம், பாசம் |
| அழிவைத் தருவது இரண்டு | கோபம், பொறாமை |
| எல்லோருக்கும் சமமானது | பிறப்பு, இறப்பு |

## (ஆ) அறிவோமா ஆன்மீகம்

### பிள்ளையார் சுழி

பிள்ளையார் சுழி என்பது அகரம், உகரம், மகரம் (அ, உ, ம) ஆகிய மூன்றையும் அடக்கியுள்ள நாத பிரம்மாகிய ஓம் என்றும், பிரணவத்தின் ஆரம்ப படிவம், அதில் உள்ள வட்டவடிவம் சிவசக்தி பீடம், கோடு சிவலிங்கம் என்று சொல்லப்படும், எழுதத் தொடங்கு முன் பிள்ளையார் சுழியை எழுதுவது, எழுத மேற்கொள்ளும் செயல் இடையூறின்றி முடிய கணபதியை நிறுத்தி வழிபடுவதைப் போன்றதாகும்.

### தீப வழிபாடு



| | |
|---|---|
| நெய் தீபம் | ஞானம் ஏற்படும் |
| நல்லெண்ணெய் தீபம் | எமபயம் அணுகாது |
| இலுப்பெண்ணெய் தீபம் | ஆரோக்கியமுண்டாகும் |
| ஆமணக்கெண்ணெய் தீபம் | சகல சம்பத்தும் உண்டாகும் |

(இவையனைத்திற்கும் பருத்தி நூல் திரியே சிறந்தது)

### விரதம் எதற்கு?

விரதம் எதற்காக? அதற்காகப் பட்டினி, தூக்கமின்மை, மவுனம் ஆகியவை அவசியமா?. விரதம் இருந்து பழகினால், மனதிற்கு உறுதியும், செயலில் திறமையும், ஆன்மீக சந்தோக்ஷமும் வளரும். விரதம் இருப்பது நல்லது என்பதைத் தொடர்ந்து அதைக் கடைப்பிடித்துப் பார்த்தால், அறியும் வாய்ப்பு உள்ளது. இவையெல்லாம் மனதைக் கட்டுப்படுத்தி, அதன் சக்தியையும், தெய்வ

பக்தியையும் வளர்க்கும். உடற்பயிற்சிகளால் உடலுக்கு வலிமை ஏற்படுகிறது. அதேபோல் பட்டினி, மவுனம் ஆகியவற்றால் மனதிற்கு வலிமையும், தெய்வ பக்தியும் வளர்கின்றது.

## (இ) ஆரோக்கய பகுதி

### பழங்களின் மருத்துவ குணங்கள்



ஆரஞ்சு பழச்சாறு, கொலஸ்ட்ரால் அளவைக் கட்டுப்படுத்தும்.

ஆப்பிள் வயிற்றுப்போக்கு, குன்மம், சீதபேதி, சிறுநீரக கோளாறுகள், சிறுநீரகத்தில் கல், இதயநோய்கள் ஆகியவைகளை குணப்படுத்தும்.

நாவல் பழம் நீரிழிவை நீக்கும், வாய்ப்புண், வயிற்றுப் புண்ணை நீக்கும், விந்துவை கட்டும்.

திராட்சை, சாத்துக்குடி - ரத்த அழுத்ததிற்கு நல்லது.

கொய்யாப்பழம் உட்கொண்டால் உடல் வளர்ச்சியும், எலும்புகளும் பலம் பெறுகின்றன. வயிற்றில் புண் இருந்தால் குணப்படுத்தும்

பேரீச்சம் பழம் மிகவும் சக்தி தரக்கூடியதும், அதிகப் பணச் செலவில்லாமல் கிடைக்கக் கூடியதுமான பேரீச்சம் பழம் மிகவும் உயர்ந்த சத்துக்களை உள்ளடக்கியதாகத் திகழ்கின்றது.

பேரீச்சம் பழம் உடலுக்குத் தேவையான சக்தியை எந்த அளவுக்குத் தரக் கூடியது என்ற கணக்கைக் கவனித்தோமானால் இதன் சிறப்பு நமக்குப் பிரமிப்பையே ஊட்டும். அதாவது ஓர் அவுன்ஸ் பேரீச்சம் பழத்தில் 98.4 கலோரிகள் உள்ளன என்றால் அது அளிக்கும் அபரிமிதமான சக்தியைப் பற்றி விளக்கவும் வேண்டுமா?

பேரீச்சம் பழத்தில் உள்ள சக்தி பெறும்பாலும் குளுகோஸ் என்னும் சர்க்கரைச் சத்து உருவத்தில் அடங்கியிருக்கிறது.இதில் அடங்கியுள்ள குளுகோஸ் சக்தியானது எழுபது சதவிகிதமாகும். பேரீச்சம் பழத்தில் அடங்கியுள்ள சர்க்கரைக்கும் கரும்புச்சர்க்கரைக்கும் வித்தியாசமுண்டு.

பேரீச்சம் பழத்தில் அடங்கியுள்ள சர்க்கரைச் சத்திலே உடல் போஷனைக்கு மிகவும் தேவையான புரதம், வைட்டமின், இரும்புச் சத்து, கால்ஸியம் போன்றவை கலந்திருப்பது இதன் சிறப்புகளில் ஒன்று.

கரும்புச் சர்க்கரையோ அதிக இனிப்பு இயல்புடன் செயற்கையாகத் தயாரிக்கபடுகின்றது. இக்காரணத்தால்தான் கரும்புச் சர்க்கரையை அதிகமாகப் பயன்படுத்துவோருக்கு இரைப்பைக் கோளாறும், வயிற்றில் புளிப்பும் தோன்றிப் பல வகையில் உடல் நலததைக் கெடுக்கின்றது.

நீரிழிவு நோய் தோன்றுவதற்கும் இது ஒரு காரணம் என்று கருதப்பகின்றது.

கரும்புச் சர்க்கரையைச் சற்று அதிகமாக உண்ண நேர்ந்தால் குறிப்பாக குழந்தைகளுக்கு உணவில் பலவகையான உடல்நலக் கேடுகள் சுலபமாகத் தோன்றிவிடக்கூடும். ஆனால் பேரீச்சம் பழத்தை எவ்வளவு. அதிகம் சாப்பிட்டாலும் அதனால் கேடு ஒன்றும் நேரிடுவதில்லை. குழந்தைகளுக்கு சற்றும் அச்சமின்றி எவ்வளவு வேண்டுமானாலும் உண்ணக் கொடுக்கலாம்.

மலச்சிக்கல் ஏற்படாமல் இது தடுப்பதோடு இதற்கு முன்னர் மலச்சிக்கல் ஏற்பட்டிருந்தாலும் அதைச் சரி செய்துவிடும் ஆற்றல் பெற்றுத் திகழ்கின்றது.

## (ஈ) பர்மா பயணம்

நகரத்தார்கள் சீரும் சிறப்புமாக கோலோச்சிய நாடு பர்மா. அங்கே பல நகரத்தார் கோயில்கள் உண்டு. அந்த மண்ணை ஒரு முறை மிதிக்க வேண்டும் என்பது என் அவா. ஸ்ரீ தெண்டாயுதபாணியின் அருளால் அந்த பாக்கியம் எனக்கு மூன்று முறை கிடைத்தது.

பர்மாவில் இன்னும் சில நகரத்தார்கள் உள்ளனர். அவர்களிடம் பேசிய பொழுது சில சுவையான தகவல்கள் கிடைத்தன. எனது பயணங்களின் விரிவாக்கத்திற்குச் செல்லும் முன் அவைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அவைகள் பின் வருமாறு.

- 1930, 1940களில் சுமார் 2500 நகரத்தார் ஆண்கள் வட்டித் தொழில் செய்து வந்தனர்.
- அவர்கள் பர்மா நாட்டில் சுமார் 70 - 80 கிராமம் மற்றும் நகரங்களில் வாழ்ந்து வந்தனர்.
- பர்மாவில் உள்ள விளை நிலங்களில் 60 சதவீதம் நம் நகரத்தாருக்கு சொந்தம்.
- நமக்கு மொத்தம் சுமார் 60 நகரக் கோவில்கள் உண்டு.
- அவைகளில் 2 - 3 மட்டும் விநாயகர் கோவில்கள். மற்ற யாவையும் ஸ்ரீ தெண்டாயுதபாணி கோவில்கள்.
- 1930ல் ரங்கூனில் இருந்து சென்னை செல்வதற்கான ஒரு வழி கப்பல் பயணக் கட்டனம் ரூ10/-.
- அதே காலகட்டத்தில் ஒரு நிலச் சொந்தக்காரரின் நெல் கொள்முதலின் ஒரு போக வருமானம் ரூபாய் ஒரு லெட்சம். வருடத்திற்கு மூன்று போகம் விளைச்சல்.
- இரண்டாம் உலகப் போரின் சமயத்தில் தாயகம் திரும்பிய நகரத்தார்கள், 1950ன் தொடக்கத்தில் மீண்டும் பர்மா திரும்பினர். ஆனால் அனைத்து நிலங்களும் தேசிய மயமாக்கப்பட்டுவிட்டன.

❖ *1964 ம் ஆண்டு ராணுவ புரட்சியின் போது பெருவாரியான இந்தியர்களும், நகரத்தார்களும் தாயகம் திரும்பினர்.*



*2004ம் ஆண்டு நானும் எனது நன்பர் பனையப்பட்டி SP. ராமனாதன் அவர்களும் ஒரு Singapore Tour Company மூலமாக ஐந்து நாள் சுற்றுலாவிற்கு ஏற்பாடு செய்து பர்மாவின் தலைநகரான ரங்கூன் சென்றடைந்தோம். பர்மா இப்பொழுது மியான்மார் என்றும், தலைநகரான ரங்கூன் யாங்கூன் என்றும் அழைக்கப்படுகிறது. பர்மாவின் தலைநகரமும் சமீபத்தில் ரங்கூனில் இருந்து வேறு இடத்திற்க்கு மாற்றப்பட்டுள்ளது. சுற்றுலா ஏற்பாட்டாளரும் முதல் நாள் எங்களை சுலே பகோடா (Sule Pagoda) மற்றும் பர்மா நாட்டின் மிகப் பெரிய பகோடான சிவேடகன் பகோடா (Shwedagon Pagoda) போன்ற இடங்களுக்கு அழைத்துச் சென்றனர். இரண்டாம் நாள் நாங்களே தனியாக நமது நகர தெண்டாயுதபானி ஆலயம் இருக்கும் பசுமந்தான் கோவில் பசுமந்தான் மடம், மற்றும் மொகல் வீதியில் இருக்கும் ஆறறை ஸ்ரீ முருகப்பெருமான் ஆலயத்திற்கும் சென்றோம். ஆறறை தான் அந்தக் காலத்தில் கிட்டங்கியாக பயன்பட்டு வந்துள்ளது. மூன்றாம் நாள் ரங்கூனிலிருந்து 160கிமீ தூரம் உள்ள சைட்டியோ என்னும் இடத்தில் உள்ள புகழ்பெற்ற புத்தர் ஸ்தூபியைச் சென்றடைந்தோம். நான்காம் நாள் ரங்கூன் திரும்பிய நாங்கள் சாயங்கால பூசைக்காக ஆறறைக்கு சென்றடைந்தோம். அங்கு வாழும் நகரதார்களிடம் சிறிது நேரம் பேசிக் கொண்டு விட்டு கிளம்பும் நேரத்தில் என் கண்ணில் கண்ணீர். செட்டி முருகனை மீண்டும் தரிசிக்க வருவோமா என்ற ஏக்கம்.*

*சிங்கப்பூர் திரும்பியவுடன் இந்தப் பரவச அனுபவத்தை என் மனைவியிடம் பகிர்ந்து கொண்டேன். வீடியோ மற்றும் நிழற்படங்களைப் பார்த்த என் மனைவிக்கு அங்கு செல்ல வேண்டும் என்ற ஆவல்.*

*அதனை ஏற்று 2005 ஆம் ஆண்டு நானும் என் மனைவியும் மீண்டும் ரங்கூன் சென்றடைந்தோம். இந்த முறை Free and Easy என்ற பயனத்திட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்து கொண்டோம். பர்மாவில் சுமார் 60 நகரத்தார் கோயில்கள் உள்ளன என்பதை அறிந்து கொண்ட நாங்கள் அவற்றில் சிலவற்றையாவது காண வேண்டும் என்று ரங்கூனிலிருந்து மோல்மேன் வரை சென்றோம். ரங்கூனிலிருந்து பகோ மற்றும் லேகு ஸ்ரீ தெண்டாயுதபாணி ஆலயம், பிறகு சைக்கோவில் உள்ள செல்வவிநாயகர் ஆலயம், செஞ்சாய் காளியம்மன், தட்டோன் சுவேச்சான் ஸ்ரீ தெண்டயுதபாணி ஆலயம் சென்று இறுதியில்*

மொல்மேன் ஸ்ரீ நகர தெண்டாயுதபாணி ஆலயம் சென்றடைந்தோம். நமது நகரத்தார் முதன் முதலில் 1800 தொடக்கத்தில் சென்ற ஊர் மோல்மேன் என்று கேள்விப்பட்டோம். அன்றிரவு அங்கு தங்கியிருந்த நாங்கள் அடுத்த நாள் காலையில் மோல்மேனில் உள்ள மூன்று அறை என சொல்லப்படும் ஸ்ரீ தெண்டாயுதபாணி ஆலயம் அமைந்துள்ள கிட்டங்கிக்கு சென்றுவிட்டு அன்று இரவு ரங்கூன் திரும்பினோம். அடுத்த நாள் செளட்டான் மற்றும் கம்பையில் உள்ள முருகன் ஆலயத்திற்க்கு சென்று திரும்பிய நாங்கள் மனத்திருப்தியுடன் சிங்கப்பூர் திரும்பினோம்.

பர்மா முருகனின் அருளால் மூன்றாவது முறையாக 2006 ம் ஆண்டு என் பெற்றோரை அழைத்துக் கொண்டு மேற்கூறிய அனைத்துக் கோயில்களுக்கும் மீண்டும் சென்று வந்தோம். என் பெற்றோருக்கு அளவில்லா மகிழ்ச்சி.

பர்மாவில் நமது நகரத்தார் ஆண்களுக்குப் பிறந்த பல குடும்பங்கள் உள்ளன. அவர்களுக்கு எல்லாம் செட்டியாருக்கு பிறந்தவர்கள் என்று சொல்லிக் கொள்வதில் பெருமிதம். செட்டி பயா என்றால் அனைவரும் அறிவர். பயா என்றால் கோயில் என்று அர்த்தம் பல சாப்பாட்டுக் கடைகளுக்கு சிட்டி கடை என்று பெயர். அப்படிப் பெயரிடுவது ராசியாம். இப்படி சீரும் சிறப்புமாக நமது முன்னோர்கள் வாழ்ந்த நாட்டிற்க்கு நான் மூன்று முறை சென்று வந்தேன் என்பதில் எனக்கொரு திருப்தி. யாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெற வேண்டும் என்பது என் அவா.

நம் நகரத்தார் பெருமக்கள் அனைவரும் வாழ்வில் ஒரு முறையாவது இங்கு சென்று அங்கு வாழும் நமது செட்டி முருகனைத் தரிசிக்க வேண்டும். அவன் அருள் பெற வேண்டும்.

எத்தனை நபர்கள் இந்த புனித சுற்றுலாவிற்க்கு வர விரும்புகிறார்கள் என்று கணக்கெடுத்த பிறகு இந்த பயணத்திற்க்கு ஏற்பாடு செய்யலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

இதனை பற்றி மேலும் அறிய விரும்புபவர்கள், 90663649 என்ற எண்ணில் C.Y. Ravi ஐ தொடர்பு கொள்ளவும்.

C.Y.Ravi *(L082)*

# வாழிய நகரத்தார்!

*அன்றாடம் திருப்பணியை ஆண்டாண்டாய் செய்கின்ற*
*ஆறுமுகன் அருள்பெற்ற, நகரத்தார் பெருமக்கள்!*
*அயல்நாட்டினிலும் அறப்பணியை திருப்பணியாய் கண்டதனால்*
*அந்நாட்டு மக்களாலே புகழாரம் சூட்டக்கண்டேன்.*

*ஊரணியை ஊர்ஊராய் பேரணிபோல் அமைத்தவர்க்கு*

சாரணியாய் வாழ்த்துக்கள் சரமாறிப் பொழியக்கண்டேன்
ஓரணியில் நகரத்தார் ஒன்றாக இணைந்திட்டால்
வேறணியே இல்லை வெல்வதற்கு இவ்வுலகில்.

பாதயாத்திரை கொண்டு பழனிமலை முருகனையே
பார்புகழச் செய்தவர்க்கு; பரிசுமழை பொழியக்கண்டேன்
முத்திரையால் முதன்முதலில் முருகனை வணங்கி
நித்திரை கண்டவர்தம் நிழலில் நெகிழ்ச்சிகண்டே.

கோவில்கட்டி கோடிப் புண்ணியம் சேர்த்தவர்க்கு
மாவிலைத் தோரணம்கண்டு மகுடம் சூட்டக்கண்டேன்
நாவில் உதிக்கின்ற நற்றமிழால் நாதனுக்கு
பாவடிகள் தந்தவர்க்கு பரமனருள் கிட்டக்கண்டேன்.

முற்றும் துறந்து முறையாகக் காவடிகொண்டவர்க்கு
முக்தியுடன் முருகனருள் மும்மாறிக் கிடைக்கக்கண்டேன்
சற்றும் சளைக்காமல் சோதனையய்ச் சாதனையூற்றாக்கி
சாதுரியம் புரிந்தவன் பூரிப்பில் புகழ்ச்சிகண்டேன்.

தன்னலமில்லா வாழ்க்கைகொண்ட தன்னிகரற்ற பெரியோராய்
மண்நலம் போற்றி மகேசன்சேவை செய்தவர்க்கும்
கல்விக்கென காசுகளைத் தூசுபோல் கொண்டவர்க்கும்
காலமெல்லாம் கவிநூறு சூட்டிடும் காட்சிகண்டேன்.

தெய்வத் திருநகராம் தேவகோட்டை நகரிருந்து
சக்திஉமை பாலனுக்கு சளைக்காமல் யாத்திரை
முக்திமுதலில் கண்டிட்ட நகரத்தார் பெருமக்கள்
பெருமையினைக் கூறுவதில் பேருவுவகைக் கொள்கின்றேன்.

*V.R.பழனியப்பன். (L069)*

# மகளிர் பகுதி

## (அ) வீட்டுக் குறிப்புகள்

- ❖ மெழுகுதிரியை சிறிது நேரம் குளிர்சாதனப்பெட்டியில் வைத்து விட்டு கொளுத்துங்கள். திரி அதிக நேரம் எரியும்.
- ❖ மிக்சியில் வேலை முடிந்ததும் சிறிதளவு தண்ணீரை ஊற்றி லேசாக ஓடவிடுங்கள். நன்றாக சுத்தமாகி விடும். பின்பு லேசாக அலசினால் போதும்.
- ❖ வெள்ளிப் பாத்திரங்களை பல் துலக்கும் பேஸ்ட் கொண்டு தேய்த்தால் பளிச்சென்று மின்னும்.
- ❖ தோடு திருகு லூசாக இருந்தால் திருகை வெள்ளைப்பூண்டு பல்லில் அழுத்தி எடுத்து தோட்டில் மாட்டினால் இறுக்கமாக இருக்கும்.

❖ பட்டுப்புடவைகளை மடிக்கும் போது ஜரிகையை உட்புறம் வைத்து மடித்தால் ஜரிகை கறுத்துப் போகாமல் இருக்கும்.

## சமையல் பகுதி

### (அ) சமையல் டிப்ஸ்

❖ இட்லிக்கு உளுந்தம் மாவு கூடிப் போயிருந்தால் ரவையை ஊறவைத்து இட்லி மாவுடன் கலந்து சுட்டால் மிருதுவாக இருக்கும்.
❖ மல்லித்தூளில் சிறிதளவு உப்பு கலந்து வைத்தால் எளிதாக கெட்டுப்போகாது.
❖ துவரம் பருப்பு வேக வைக்கும் பொழுது ஒரு ஸ்பூன் வெந்தயத்தை, பருப்புடன் கலந்து வேக வைத்தால் சாம்பார் இரவு வரை கெடாமல் இருக்கும்.

### (ஆ) சமையல் குறிப்பு

**காஜு கத்லி**



### தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| முந்திரிப்பருப்பு | 1 கப் (பொடித்தது) |
| சீனி | 1 கப் (பொடித்தது) |
| பால் | 2 டீஸ்ப்பூன் |

### செய்முறை

முதலில் வாணலியில் பாலை ஊற்றிக் கொதிக்கவிட்டு, பிறகு பொடித்த சீனியை பாலில் கொட்டி, சீனி கரைந்தவுடன் அடுப்பை நிறுத்தி விடவும். பிறகு பொடித்த முந்திரியைக் கொட்டி கிண்டினால், சப்பாத்தி மாவு போல் பதம் வரும். அதை எடுத்து சப்பாத்தி கட்டையில் வட்டமாக தேய்த்து சதுரமாக கீற்று போடவும். பத்தே நிமிடத்தில் சுவையான காஜு கத்லி தயார்.

*மீனா செந்தில்நாதன் (Y0468)*

## கோபி மஞ்சூரியன்



### தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| *காலிபிளவர்* | *3 கப் (நறுக்கியது)* |
| *மைதா மாவு* | *1 கப்* |
| *இஞ்சி, பூண்டு விழுது* | *1 டீஸ்பூன்* |
| *வெங்காயத்தாள்* | *1/2 கப் (நறுக்கியது)* |
| *குடைமிளகாய்* | *1/4 கப் (நறுக்கியது)* |
| *பூண்டு* | *2 டீஸ்பூன் (நறுக்கியது)* |
| *சோயா சாஸ்* | *2 டீஸ்பூன்* |
| *தக்காளி சாஸ்* | *2 டீஸ்பூன்* |
| *மிளகாய் சாஸ்* | *1 டீஸ்பூன்* |
| *மிளகாய் விழுது* | *2 டீஸ்பூன்* |
| *கரம் மசாலா தூள்* | *தேவையான அளவு* |
| *உப்பு* | *தேவையான அளவு* |

### செய்முறை

*ஒரு பாத்திரத்தில் தண்ணீரைக் கொதிக்கவிட்டு, அதில் உப்பு, மஞ்சள்தூள், காலிபிளவரை சேர்த்து அடுப்பை அமத்தி விடவும். 5 நிமிடம் கழித்தி தண்ணீரை வடித்து, காலிபிளவரை தனியாக எடுத்து வைக்கவும். ஒரு பெரிய பாத்திரத்தில், இஞ்சி பூண்டு விழுது, பச்சை மிளகாய் விழுது, உப்பு, மைதா இவை அனைத்தையும் சேர்த்து தண்ணீர் விட்டு, பஜ்ஜி மாவு போல் கரைத்துக்கொள்ளவும். இந்த மாவில் காலிபிளவரை நனைத்து எண்ணையில் பொன்னிறமாக வருத்து எடுக்கவும்.*

*பிறகு, சிறிதளவு எண்ணை ஊற்றி, அதில் வெங்காயத்தாள், நறுக்கிய பூண்டு, குடைமிளகாய் போட்டு, 5 நிமிடம் நன்றாக வதக்கி, பிறகு சோயா சாஸ், மிளகாய் சாஸ், தக்காளி சாஸ், மிளகாய் தூள், கரம் மசாலா தூள், உப்பு, பொறித்த காலிபிளவர், இவற்றை சேர்த்து நன்றாகப் பிரட்டி, ஒரு கிரேவி போல் எடுக்கவும்.*

*மீனா செந்தில்நாதன் (Y0468)*

## (இ) கோலம்



**10-4 வரிசை, நேர்புள்ளி 1 வரை.**

*பிரியா ரவி (L082)*

# சிறுவர்கள் பகுதி

## (அ) புதிர் பகுதி

1. திரை அரங்கம் இல்லாத நாடு எது?
2. எந்த மாதத்தில் குழந்தை அவ்வளவாக அழாது?
3. கொசுக்களே இல்லாத நாடு எது?
4. தண்ணீருக்கு வெளியேயும் வாழக்கூடிய மீன் எது?
5. பாம்புகளே இல்லாத தீவு எது?
6. உலகில் ஒன்பது நிறங்கள் கொண்ட பறவை எது?

**[விடை- அடுத்த இதழிலில் வெளிவரும்]**

# இதர செய்திகள்

**திருமணம்**

*நமது சங்க உறுப்பினர் (Y0125), கடியாபட்டி மு.நாகப்பன் செட்டியார் - தேனம்மை ஆச்சி தம்பதியினரின் மகள் நித்தியாவுக்கும் தேவகோட்டை ராம. வீரப்பச்செட்டியார் - மீனா ஆச்சி தம்பதியினரின் மகன் வீர.சரவணனுக்கும் (Y0473), 22-11-2007 அன்று கடியாப்பட்டியில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.*

*நமது சங்க உறுப்பினர் வி.ராமநாதன் (Y0177) அவருடைய பெற்றோர் ஆத்தங்குடி திரு.நாகர்கோவில் சு.வள்ளியப்ப செட்டியார் - சிட்டாள் ஆச்சி, தம்பதியினர், திரு வள்ளியப்ப செட்டியாரது 75வது பிறந்த தின விழா, பிள்ளையார்பட்டி, பெண்டிர் நகர விடுதியில் 23-01-2008 அன்று சிறப்பாக நடைபெற்றது. படம் பின் அட்டையில்.*

## குழந்தை பிறப்பு

நமது உறுப்பினர் திரு. P.K.செட்டி திருமதி வள்ளி தம்பதியினருக்கு மகள் வழி பேத்தி ஜனனி வசந்தா சண்முகம் 9.12.2007 அன்று பிறந்திருக்கிறது.

## புது உறுப்பினர்கள்: (New Members):

| | |
|---|---|
| New member no: Y0503 | Ramanathan Nachiappan |
| Kittangi No. 15 | 32 Tanglin Halt Road |
| Ilayathangudi | #06-208 |
| Karaikudi | S(142302) |
| Tel.: 66188054 / 92992461 | Ramanathan.nachiappan@gmail.com |

| | |
|---|---|
| New member no: Y0504 | Meyyappan Meenakshi Sundaram |
| Kittangi No. 01 | Blk 172. #11-431 Bedok South Road |
| Vairavan Koil | S(460172) |
| Kandramanickam | |
| Tel.: 64439372 / 90666702 | Ramanathan.nachiappan@gmail.com |

| | |
|---|---|
| New member no: Y0505 | Andiappan. Y.RM |
| Kittangi No. 1A | Blk 140, Bishan Street 12 |
| Ilayathangudi | #05-484 |
| Rangiem | S(570140) |
| Tel.: 02-66115040 / 02-96463530 | andiappan@singnet.com.sg |

| | |
|---|---|
| New member no: Y0506 | Subramaniam Nagappan |
| Kittangi No. 9 | Blk 66, #08-339 |
| Vairavankoil | Common Wealth Drive |
| Kadiyapatti | S(140066) |
| Tel.: 64713571 / 90953884 | S_nagu24@yahoo.com |

| | |
|---|---|
| New member no: Y0507 | Alagappan Subramanian |
| Kittangi No. 01 | Blk 343, Bukit Batok Street 34, |
| Mathur | #06-192 |
| Kilasivalpatti | S(650343) |
| Tel.: 68961544 / 91904881 | Alagappan_sp@yahoo.com |

| | |
|---|---|
| New member no: L229 | Subbiah Narayanan |
| Kittangi No. 15 | Blk 242, Yishun Ring Road |
| Mathur | #03-1132 |
| Rayavaram | S(760242) |
| Tel.: 63577953 / 90616250 | meenalsubbiah@hotmail.com |

## முகவரி மாற்றம் (Change of address):

| | | |
|---|---|---|
| Y0185 | S.RM.SP.Ramasamy | Shanthi |
| Blk 4A Boon Tiong Road | | |
| #02-19, Singapore(164004) | | |
| Tel: 64059747 / 93890406 | | |
| Email: heyrama2@yahoo.com.sg ,Shanbalz@yahoo.com.sg | | |

| | | |
|---|---|---|
| Y0459 | Srinivasan Chinnan Chetty | |
| Blk 525 Serangoon North Ave 4 | | |
| #02-68, Singapore (550525) | | |
| Tel: 65557494 / 96784840 | | |
| Email: srinivasan.chetty@gmail.com | | |

| | | |
|---|---|---|
| Y0474 | P.A. Palaniappan | Unnamalai. PL |
| Blk 309 A, #07-345 | | |
| Ang Mo Kio Street 31, Singapore (562309) | | |
| Tel: 94889495 | | |
| Email: apal_trichy@yahoo.com, coralexpants@yahoo.com | | |

| | | |
|---|---|---|
| L048 | Rama Muthu | Umayal Achi |
| Blk 90 Tanglin Halt Road | | |
| #10-338, Singapore (141090) | | |
| Tel: 63005252 / 92378140 | | |
| Email: muthurama23@yahoo.com | | |

| | | |
|---|---|---|
| L207 | Chellappan Ranaganathan Srinivasan | Senachi |
| Blk 30 Balam Road | | |
| #08-46, Singapore (370030) | | |
| Tel: 91854913 | | |
| Email: crsvasan@hotmail.com, Crsvasan2004@yahoo.com.sg | | |

| | | |
|---|---|---|
| L013 | P.K. Chetty | K. Valli |
| 28 Upper Serangoon View | | |
| #09-34 Rio Vista, Singapore (534207) | | |
| Tel.: 64514492 / 96265071 | | |
| Email: chetty@starhub.net.sg | | |

***தொலைப்பேசி / கையடக்கத்தொலைப்பேசி / மின் அஞ்சல் மாற்றம் (****Change in Telephone/Handphone Number/Email Only)*

| | | |
|---|---|---|
| L022 | Chockalingam. S | Umayal |
| Tel: 64000199 / 90078172 | Email: umachoku@gmail.com | |

***சந்தா பாக்கி***

*சிங்கை நகரத்தார் சங்கத்தின் ஆண்டுச் சந்தா பாக்கி உள்ள உறுப்பினர்கள், சங்கத்தின் பொருளாளர்களையோ, தலைவரையோ அணுகித் தங்கள் சந்தா பாக்கிகளை செலுத்தும்படி கேட்டுக் கொள்கிறோம், அல்லது மார்ச் 9ம் தேதி ஒரு நாள் சுற்றுலாவின் பொழுது செலுத்தலாம்.*

# நன்றி

*இம்மலரை தயாரிக்க உதவி புரிந்த அனைவருக்கும், குறிப்பாக* ***சித.அருணாசலம் (Y0029), அழகு திருநாவிற்கரசு (Y0013), மலர்க்குழு உறுப்பினர்கள்,*** *மற்றும் விளம்பரம் செய்து உதவிய விளம்பரதாரர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளோம்.*

*நாங்களும், எங்களால் இயன்ற வரை இம்மலரைப் பிழையின்றி வெளியிட முயற்சி செய்துள்ளோம். இருந்தும், பிழையிருப்பின் எங்களை மன்னித்து, பிழைகளை எங்கள் கவனத்திற்கு கொண்டு வந்தால், பிழைகளை திருத்திக் கொள்ள ஏதுவாக இருக்கும்.*

*மலரில் உங்களது படைப்பு (கதை, கவிதை, புதிர், சமையல் குறிப்பு, கோலம்) வெளிவர வேண்டும் என்று விரும்பினால், உடனே உங்களது படைப்பினை* pyramid.pms@gmail.com *என்ற மின்னஞ்சல் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும். அப்படைப்புக்கள் பரிசீலனை செய்து வெளியிடப்படும்.*

***பின் குறிப்பு :*** *படைப்புக்கள் பொது நலன், பொது கருத்து சார்ந்ததாக இருக்கவேண்டும். படைப்புக்களை “**ஈ-கலப்பை**” என்னும் மென்பொருள் உதவியுடன் படைத்து, அனுப்பவேண்டுகிறோம்.*

*2008 மலர் குழு*